மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே அந்தக் கேள்வி எழாது. அந்தக் கேள்வியை எழுப்புவதற்கு ஏதுவாக மானியம் வருகிறது. அப்பொழுது அந்தக் கேள்வியை எழுப்பலாம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, செவிலியர்கள் அணியும் உடை கவர்ச்சியும் வசதியும் இல்லாமல் இருப்பதால், நம்நாட்டு நாகரிகத்திற்கு ஏற்ற வகையில் உடை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினருக்கு உடை கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்ற அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு உள்ள அக்கறை மிக்க வசதியாகப் பணியாற்றக்கூடிய வகையில் உடை இருக்க வேண்டுமென்பது. இப்போது அவர்கள் அணிகின்ற உடைதான் பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூலூரிலுள்ள மருத்துவ மனை

* 535.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதியில் உள்ள சூலூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சையளிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

செம்மிபாளையத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம்

* 536 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் தொகுதியில் பல்லடம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட செம்மி பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டு கட்டடம் பேஸ் மட்டம் வந்து நின்று விட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

அரசு அச்சகத்தில் இரவு நேரத் தொழிலாளர்கள்

* 537 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகங்களில் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவசமாக ரொட்டியும் டீயும் கொடுக்க திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

1972 மார்ச் 17]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அரசினர் அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு வீதத்தில், இலவசமாக தேநீரும், ரொட்டி அல்லது பன் ரொட்டி வழங்கும் திட்டம் ஒன்று ஏற்கெனவே செயலில் உள்ளது. இருந்த போதிலும், நடைமுறையில் சென்னை மாநகரில் தங்கசாலையில் உள்ள மத்திய அச்சகத்திலும், அண்ணுசாலை, உயர்நீதிமன்றம் ஆகிய இடங்களில் உள்ள கிளை அச்சகங்களிலும், மாவட்டங்களில் புதுக்கோட்டையில் உள்ள கிளை அச்சகத்திலும் மட்டுமே இவை வழங்கப்படுகின்றன. இவற்றை வழங்குவதில் நடைமுறையில் தோன்றிய இடையூறுகளின் காரணமாக, சென்னை மத்திய சிறை அச்சகத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு ரொக்கமாக வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் டெண்டர் கேட்டு அறிவிப்பு விடுக்கப்பட்டபொழுது, ஒப்பந்தக்காரர் எவரிடமிருந்தும் டெண்டர் ஏதும் வரவில்லையாதலால், அவ்விடங்களிலுள்ள வட்டார அரசினர் அச்சகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மேலே சொல்லப்பட்ட வீதத்தில் ரொக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மாதிரி அச்சகங்களிலே நைட் ஷிப்ட் வேண்டாம் என்று சொல்லிவிட்டு பகலிலே வேலைசெய்தால் நல்லதல்லவா? தொழிலாளர்கள் நைட் ஷிப்ட் செய்வது கஷ்டமாக இருக்குமே. எனவே இதை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்கிருர்கள். ஆனல் தொழிலாள தோழர்கள் ஓவர் டைம் வேண்டும், நைட் ஷிப்ட் வேண்டும் என்று சொல்கிருர்கள். அரசாங்கம் ஓவர்டைம் முறையை எவ்வளவு குறைக்கலாம் என்பதைப் பரிசிலித்து வருகிறது.

ஆண்டிப்பாளையத்திலுள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்

* 583 வினு.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், ஆண்டிப்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆண்டிப்பாளையம் கிராமத்தில் உள்ள 12 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க பால ராஜபுரத்தில் சர்வே எண். 46-7-ஏ-இல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 6-வது